சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆடி 12
ஷஃபான் பிறை 10
புதன் 27—7—77
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 17
தொலைபேசி: 23411
விலை சதம்: 60

● எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை ஏற்பது

# விடுதலைப் போராட்டத்துக்கு

# சாதகமா? பாதகமா?

## தலைவர்கள் தீவிர மந்திராலோசனை!

எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை தமிழர் விடுதலைக்கூட்டணி ஏற்றுக்கொள்வது கூட்டணியின் தமிழ் ஈழப்போராட்டத்துக்கு வலிவு சேர்க்குமா? அல்லது பலவீனப்படுத்துமா? எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றுக்கொள்வதால், கூட்டணி மேற்கொண்டுள்ள விடுதலைப்போராட்டத்துக்கு எந்தெந்தவகையில் நன்மைகள் விளையும்? எந்தெந்த வகையில் தீமைகள் விளையும்? விடுதலை இயக்கத்துக்கு மேலும் வலுவூட்டக்கூடியதாக குறித்த பதவியை எவ்வாறு பயன்படுத்தலாம்? — இவைபற்றி கூட்டணியின் மூத்த தலைவர்கள் இப்போது மந்திராலோசனை நடத்திவருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைமையை கூட்டணி ஏற்கும் பட்சத்தில், அதிலும் கூட்டணி ஒரு புதிய புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தக்கூடும் என்று தெரிகிறது.

தேசிய அரசுப்பேரவையில் இப்போது இரண்டாவது பெரிய கட்சியாகவும், பிரதான எதிர்க்கட்சியாகவும் கூட்டணியே விளங்குகிறது. இந்த நிலையில் கூட்டணி எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்வதால், விடுதலை இயக்கத்துக்கு நன்மை விளையுமா? அல்லது பாதகம் ஏற்படுமா என்பது குறித்தே கூட்டணியின் முக்கிய தலைவர்களும் புதிய பா.உ.க்களும், கூட்டணி ஆதரவாளர்களும் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை கூட்டணி ஏற்றுக்கொள்வதால், உலக பத்திரிகைகளினதும், உலக நாடுகளினதும் கவனம் கூட்டணி மீது மேலும் திரும்பும்; குறித்த பதவியினுல் கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்தி தமிழ்ஈழ விடுதலைக் கோரிக்கைக்கு உலகில் மேலும் ஆதரவையும் அபிமானத்தையும் திரட்டலாம் என்று பலர் கருதுகிறுர்கள்.

தேசிய பேரவையில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை கூட்டணியின் பொறுப்பும் இலட்சியத் துடிப்புமுள்ள தலைவர் ஒருவர் அலங்கரித்தால் எதிர்க்

—5-ம் பக்கம் பார்க்க



## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எம். ஜி. ஆர். கருணநிதி வாழ்த்து

பொதுத் தேர்தலில் தமிழ் ஈழக் கொள்கையை முன்வைத்துப் பெருவெற்றி யீட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் நாடு முதலமைச்சரும் அதிமுக தலைவருமான திரு. எம். ஜி. ஆர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் திமுக தலைவருமான கலைஞர் கருணநிதி, மக்கள் திமுக தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் ஆகியோர் தங்கள் மனப்பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தந்தி மூலம் தெரிவித்துள்ளனர்.

கூட்டணி செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம். அவர்களுக்கு தமிழ் நாடு முதல்வா எம். ஜி. ஆர். அவர்கள் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துத் தந்தியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"பொதுத் தேர்தலில் நீங்களும், நீங்கள் சார்ந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியும் அடைந்துள்ள மிகப் பெரிய வெற்றி கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கும், உங்க.. கட்சிக்கும் அண்ணு தி.மு.க. சார்பிலும், தமிழ் நாட்டுமக்கள் சார்பிலும் எனது இதய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

—5-ம் பக்கம் பார்க்க,

# தமிழ் ஈழக் கொள்கைக்கு 77 சத வீதம் வாக்குகள்!



* 21-7-77 நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட 18 (வடக்கு, கிழக்கு) தமிழ்ஈழத் தொகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட மொத்தமான தமிழ் வாக்குகள்
— 5,58,319

* இதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் தொகை
— 3,71,010

* தமிழ்ஈழக் கொள்கையை ஆதரித்து போட்டியிட்ட சுயாட்சிக் கழகத்துக்கு கிடைத்த மொத்த வாக்குகள் தொகை
— 10,740

* தமிழ்ஈழக் கொள்கையை ஆதரித்துப் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்களான பருத்தித்துறை வீரவாகு, முல்லைத்தீவு சந்திரசேகரி, சாவகச்சேரி குமாரசாமி, சதா நடராசா மன்னர் ஜோன்மார்க் பெற்ற மொத்த வாக்குகள்
— 22281

ஆக தமிழ்ஈழக் கொள்கைக்கு ஆதரவாக கிடைத்த மொத்த வாக்குகள்
— 4,04,031

**இது பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்குகளில் 77 சத வீதமாகும்!**

# நாவலர் அமிர்தலிங்கமே எதிர்க்கட்சித் தலைவராவார்!



எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பதென்று கூட்டணி முடிவுசெய்யும்பட்சத்தில் — அப்பதவிக்கு கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரும், இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், தந்தை செல்வாவினுல் தமது அரசியல் வாரிசு என அழைக்கப்பட்டவரும் காங்கேசன்துறை பா.உ.வுமான நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களே ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படுவார் எனத் தெரியவருகிறது, திரு. அமிர்தலிங்கம் அவர்களையே எதிர்க்கட்சித் தலைவராக்கவேண்டுமென்பதில் கூட்டணிபா.உ.க்களிடையே ஒருமித்த கருத்து நிலவுவதாகத் தெரிகிறது. திரு. அமிர்தலிங்கம் அவர்களே கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் விளங்குவார் என்று அறியப்படுகிறது.

தமிழ் ஈழத்தேசி[illegible] விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியை அழிக்கப்புறப்பட்டவர்களின் முதுகெலும்பை முறித்தெறிந்தனர் தமிழ் மக்கள்!

# இயக்கத்தின் எதிரிகளே! இதோ அண்ணாவின் அறிவுரை! படியுங்கள் உங்கள் பாதையை மாற்றுங்கள்!

**நம்முடன் இருந்தவர்களில் சிலர் மாறிவிடுவதால், நாம் கொண்ட கொள்கையின் மாண்பும், நமக்கு அக்கொள்கையிடம் ஏற்பட்டுள்ள உறுதியும், குறையுமென்று எதிர்பார்ப்பவர்கள், தங்கள் ஏமாளித்தனத்தை விரைவில் உணரப்போகிறார்கள். அவர்கள் தம்மோடு எடுத்துச்செல்லக்கூடியதெல்லாம், மனக்கசப்பு, அருவருப்பு, இவையேயன்றி, இயக்கத்தில் அவர்கள் ஊட்டிய எழுச்சி தனியாகக் குறிப்பிட்டு கண்டுபிடித்துக் கூறப்பட, காட்டப்பட முடியாத முறையில் மற்றவர்கள் ஊட்டிய எழுச்சியுடன் கலந்துபோய் விடுகிறது; பிரித்துக் காட்டவோ, பெயர்த்தெடுத்துக்கொண்டு போய்விடவோ, முடிவதில்லை.**



ஓர் இயக்கம் பலரது உழைப்பினால் உருவாகிறது. இப்படி உருவாகிய இயக்கத்திலிருந்து, அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்களில் ஒருசிலர் ஏதோ ஒரு கட்டத்தில் ஏதோ ஒரு சுயநல காரணத்துக்காக தாம் வளர்த்த இயக்கத்தைவிட்டு விலகிச் சென்று, அதே இயக்கத்தை அழித்து விடப்போவதாக கங்கணம் கட்டிக்கொண்டு முயற்சிக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள் என்னதான் முயன்றும், இவர்களால் தாம் ஒருகாலத்தில் வளர்த்த இயக்கத்தை துளிகூட அசைத்துவிடமுடிவதில்லை.

தினபதி சிவநாயகமும், சுயாட்சி நவரத்தினமும் ஒருகாலத்தில் தமிழரசுக்கட்சிக்கு தங்கள் உழைப்பை வழங்கியவர்கள்; ஆனால் இப்போது தமிழரசுக்கட்சியையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தொலைத்துக் கட்டிவிட சபதமெடுத்து இருப்பவர்கள்; நாங்கள் வளர்த்த கட்சியை நாங்களே அழித்துவிடுகிறோம் என்று சபதமெடுத்து நாளும் பொழுதும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக நச்சுக்கருத்துக்களை விதைத்துவந்தார்கள். தினசதி பச்சை பொய்களையெல்லாம் மூட்டை மூட்டையாக கொட்டியது. ஆனால் இவர்களால் மாபெரும் மக்கள் சக்தியான கூட்டணியின் இமாலய வெற்றியை கொஞ்சம்கூட அசைத்துவிட முடியவில்லை!

இதோ இங்கு இடம் பெறும் அறிஞர் அண்ணாவின் கட்டுரையை தினபதி சிவநாயகத்துக்கும், சுயாட்சி நவரத்தினத்துக்கும், தமிழரசுக்கட்சியிலிருந்தும் கூட்டணியிலிருந்தும் பிரிந்துசென்று, அதை எதிர்த்து அழிக்க முயற்சித்து இறுதியில் மூக்கறுபட்டோருக்கும் சமர்ப்பிக்கிறோம்!

—ஆர்.

வைரத்திலுள்ள ஒளியிலே, சில பகுதியை வேறாக பிரித்து எடுத்துச்செல்ல முடிகிறதா? பட்டைத்தீட்டி ஒளியேற்றியவன் வைரத்தை விட்டுவிட்டுச் செல்வானா கில், நான் பட்டை தீட்டியதால் கிடைத்த ஒளியை என்னுடன் எடுத்துச்செல்வேன் என்று கூறமுடியும். அது போலத்தான் கூட்டு முயற்சியின் விளைவாக ஏற்பட்டு விடும் எழுச்சியிலிருந்து எந்த ஒரு அளவையும், எவரும், தனியாக்கி, எடுத்துச்செல்ல முடியாது. உடை, உணவு, பணம், இடம், பழங்கலம், பழைய ஏடு, இப்படிப்பட்டவைகளை எடுத்துச்செல்லலாம்; எழுச்சியை எடுத்துச் சென்றிட முடியாது.

எடுத்துச்செல்ல முடியாவிட்டால் என்ன? உடைத்து அழிக்கலாமல்லவா என்று கேட்கத் தோன்றும் கோபத்தின் விளைவாக. ஆனால் கோபம் குறைந்து, அல்லது பலனற்றுப்போன நிலை பிறந்து, எண்ணிப்பார்க்கும் போது, அதுவும் நடவாது என்பது விளங்கும், ஏனெனில், எத்துணை ஆற்றலும் பக்கபலமும் தமக்கு இருப்பதாக எண்ணிக் கணக்கிட்டாலும், அது, ஒரு கூட்டு முயற்சியின் விளைவாக உள்ள ஒரு இயக்கத்தின் எழுச்சியை அழித்திடத்தக்க ஆற்றல் ஆகிவிடாது.

## இயற்கை நியதி

தோகையைத் தனியே எடுத்து, வான்கோழியுடன் இணைத்துவிடுவதால், மயிலாட்டத்தைவிட அழகானதாக இருந்துவிடாது.

காளையின் கொம்பு ஒடிந்து விடக்கூடும் — ஒடித்துவிடவும் கூடும் — ஆயின், அந்தக் கொம்பு, காளையை வீழ்த்திடவா முடியும்! — அதன் காலில் பட்டு, சிதறுண்டு போய்விடக்கூடும்.

மொத்தத்திலிருந்து விடுபட்ட — அல்லது வேறாகி விட்ட— அல்லது விலகிய — அல்லது பிரிந்த, ஒரு பகுதி, மொத்தத்தை அல்லது மிச்சத்தைவிடப் பெரியதாகவோ, வலிவு மிக்கதாகவோ, ஆகிவிட இயலாது என்பது இயற்கை நியதி.

ஆனால் அந்த ஆசை எழாமலிருக்காது; அது அரிப்பு அளவு ஏற்படத்தான் செய்யும்.

## அகம்பாவத்தின் குணம்

நாமின்றி என்ன செய்ய இயலும் என்ற எண்ணம் நம்மால்தான் எல்லாம் என்ற எண்ணத்திலிருந்து பிறக்கிறது. பிறகோ, நாமில்லாதபோது, எதுதான் இயங்கும் என்று தோன்றும். பிறகு, நாமின்றியும் ஒன்று இயங்குவதா, அதை நாம் விட்டுவைப்பதா என்று தோன்றும், பிறகு இயங்குவதை ஒழித்தாக வேண்டும் என்ற அரிப்பு ஏற்படும். அது இயலாது என்ற ஐயப்பாடு குறுக்கிடும்; குறுக்கிட்டதும்; நாம் மட்டும் போதாது. ஒத்த கருத்துடைய மற்றவர்களின் துணையை நாடவேண்டும் என்று எண்ணம் பிறக்கும், அது வளர்ந்திடின், வேறோர் 'மொத்தம்' ஏற்படும்; ஏற்பட்டதும் அந்த மொத்தத்தில் நம் நிலை என்ன, பங்கு என்ன என்ற எண்ணம் எழும்! எழுந்ததும், பழைய கதையே தான்; நம்மால் — நம்மாலே தான் — நம்மால் மட்டும் தான் — நாமின்றி என்ன ஆகும்— நாம் நாமாகிவிடுவோம் என்ற இந்தக்கட்டங்கள், வடிவமெடுக்கும் — திரும்பவும் திருப்புகழ் காவடிச்சிந்து பாடுவது கூடாது என்று ஆரம்பித்து, நொண்டிச்சிந்து, பரணி, இலாவணி இவைகளில் புகுந்து, பிறகு, அறம்பாடி அழித்தொழிப்போம் என்று முழக்கமிடும் கட்டம்தோன்றும். இதற்கு விதிவிலக்கு இல்லை என்பதை உணர சிறிது காலம் பிடிக்கலாமே தவிர, இந்த பேருண்மையிலிருந்து தப்பித்துக்கொள்ள மட்டும் முடியாது.

"மொத்தத்திலே," தன்னைக் கலந்துவிடச்செய்து கொள்ள இயலாதாருக்கு இதுதான், எப்போதும் நிலையாகிப்போகும்.

## எரிச்சலின் விளைவு

கடலிலே கலக்கும் ஆறுகள் போலத் தனித்தனியாக ஏற்படும் அறிவாற்றல், எழுச்சி பொங்கிடும் நிலை பெற்ற, ஒரு இயக்கத்திலே வந்தடைகிறது; வந்தடைந்த பிறகு, இந்த எழுச்சியிலே இதிலிருந்து இது வரை, இந்த அளவு வரையில் என்னுடையது, விருப்பம் இல்லையேல், அதனை நான் திரும்ப எடுத்துச் சென்றுவிடுவேன் — அம்மட்டோ! அந்த எழுச்சியைக்கொண்டு எழுச்சியின் இருப்பிடமாகியுள்ள இயக்கத்தையே அழிப்பேன், என்று எண்ணுவது, ஏமாற்றத்தின் விளைவு; எரிச்சலால் ஏற்படுவது; அஃதன்றி அது வீரமுமாகாது, அறிவுடைமையும் அல்ல, பலனும் தராது!


கடலில் கலந்த காவிரி கோபித்துக்கொண்டு, கடலில்தான் கலந்திட்ட அளவு நீரைத் திருப்பபெற்றுக் கொண்டு, வேறிடம் செல்வதுண்டோ? முடியாதே! அதேதான் ஒரு இயக்கத்திற்கு. தமது பங்கினைச் செலுத்தியவர்கள், விலகிச் செல்லும்போது, அது தம்முடனேயே எடுத்துச்சென்றுவிடத்தக்கது என்று எண்ணுவதும்— அந்த இயக்கத்தின் எழிலுக்கும் ஏற்றத்துக்கும், வலிவுக்கும் தாம் தந்தது மட்டும் அல்ல காரணம், கணக்குப் பார்க்காத பலர் அளித்துள்ளனர், கூட்டு முயற்சியின் வடிவம் அது என்பது அறியாமல் எந்த இயக்கத்துக்கு நான் ஏற்றம் அளித்தேனோ, அதனை நானே அழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று முழக்கமிடுவதும் பேதமை — கோபத்தால் விளைவது.

அந்தக் கோபம் குடிகொண்டிருக்கும்போது, தம்பி! வேறு எந்த எண்ணமும், கிட்டே நெருங்க பயப்படும். பாசம் என்பதுபொருளற்றதாகத் தோன்றும்! நேசம் என்பது சிலந்திக் கூடுக்கு சமம் என்று பேசச் சொல்லும். ஒட்டு என்ன? உறவு என்ன? என்று கேட்கத்தோன்றும். தழதழத்தக் குரல் இராது: தீ மிதித்த நிலையினர் போலாவர். முன்பு அறிவு இருந்ததாகக் கருதிய இடம்; மூடர்களின் முகாமாகத் தோன்றும் — இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கிறது! ஆத்திரப்படுவது, அறிவுள்ளோர் செயலாகுமா தம்பி!

"பெண்ணா இவள்! எலும்புக்கூடு" என்றானாம் ஒருவன், தன் நண்பனிடம் ஒருவளைப் பார்த்து. முதுகில் ஒரு அறை கொடுத்து அந்த நண்பன் "முட்டாளே! எலும்புக்கூடு என்று சொல்லாதே; பூங்கொடி என்று சொல்! அவன் அப்பனுக்குப் போனமாதம், அத்தையின் சொத்து ஐந்து லட்சம் கிடைத்திருக்கிறது" என்றானாம்.

அதுபோலத் தம்பி! நிலைமைக்கு ஏற்றபடி பேசுகிறார்கள் என்பது புரியவில்லையா, உனக்கு புரியும்போது கோபம் ஏன் பிறக்கவேண்டும். உன் அலட்சியப் புன்னகையன்றி அதற்கு தக்க பதில் வேறு எதுவும் இல்லையே! ஏன், சிலருக்கு இன்னமும் இது தெரியவில்லை என்றுதான் ஏக்கப்படுகிறேன். அந்த ஏக்கத்தின் காரணமாக, நான் செய்து வரும் இயக்கத்தொண்டு கூட குந்தகப்படுகிறது என்பதை கூறித்தான் ஆகவேண்டும். இதை மறவாதே தம்பி! என்னைச் சிலர், ஏசுவதால், எனக்கும் சரி, இயக்கத்துக்கும் சரி, ஒரு துளியும் கெடுதல் ஏற்படாது. அவர்கள் பாடிச்சென்ற 'போற்றி திரு அகவல்' அவ்வளவு இருக்கிறது. கைவசம்! அப்படிப் பாடினவர்கள், இப்போது இப்படி!! — சரி! அதனால் என்ன? மனித சுபாவம் எத்துணை விசித்திரமானது என்பதை அறிந்துகொள்ளும் அரிய வாய்ப்பு இவைகளெல்லாம் வேறென்ன!!

—'1961ல் அண்ணா தம்பிக்கு எழுதிய மடலிலிருந்து.''



தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அமிர்தலிங்கத்தை ஆதரித்து ஊறணி கரபந்தாட்டத்திடலில் கூட்டணி கிளைத் தலைவர் திரு. ம. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத் தமிழ் ஈழ இலட்சியத்திலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம்

## சிங்கள நாட்டை எந்தக் கட்சி ஆண்டாலும் சரி எமது விடுதலைப் போராட்டம் நடந்தேதீரும்!

## தலைவர் அமிர்தலிங்கத்தின் வீர முழக்கம்!

''மறைந்த தலைவர் அமரர் தந்தை செல்வா அவர்கள் எத்தகைய வழியில் சென்று தமிழ் ஈழத்தை அமைக்க முயன்ருரோ—அதே வழியில் நாமும் சென்று தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளோம் தென்னிலங்கையில் எந்த ஆட்சி வந்தாலென்ன — நாம் நம் தமிழ் ஈழத்தை அமைக்கும் இலட்சியத்திலிருந்து இம்மியும் விலகாமல் தொடர்ந்து விடுதலைக்காகப் போராடுவோம்!''

இவ்வாறு 21-7-77 இரவு தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் — யாழ் கச்சேரி பழைய பூங்கா வளவில் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களிடையே உரையாற்றிய கூட்டணி செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் இலட்சிய முழக்கமிட்டார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் பெரு வெற்றியீட்டிய திரு. அமிர்தலிங்கம் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''காங்கேசன்துறைத் தொகுதிக்கு நான் புதியவனுக இருந்தபோதிலும் எனது தொகுதி மக்கள் என்னை அமோக வெற்றியடையச் செய்துள்ளனர். எனது வெற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழ இலட்சியத்துக்கு கிடைத்த பெருவெற்றியாகும்.

''தென் இலங்கையில் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது, தேசிய அரசுப் பேரவையில் தமிழர் விடுதலைக் கூட்டணிதான் எதிர்க்கட்சியாக விளங்கும் என எண்ணத் தோனறுகிறது. எது எப்படியிருந்தபோதிலும, தமிழ் ஈழம் அமைக்கும் இலட்சியத்திலிருந்து சற்றேனும் விலகாமல் தொடர்ந்துவிடுதலைக்காகப்போராடுவோம்''

### சிவசிதம்பரம்

நல்லூர்த் தொகுதியில் தம்மை எதிர்த்துப்போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்களையும் கட்டுப்பணம் இழக்கவைத்து மிகப்பெரும்பான்மை வாக்குகளால்பெரு வெற்றிபெற்ற கூட்டணி செயலதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் பேசுகைகளில் கூறியதாவது:-

''தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு கிடைத்துள்ள அமோக வெற்றியைநோக்கும்போது, தமிழ் பேசும் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி கொண்டுள்ள கொள்கை மீது எத்துணை விசுவாசம் வைத்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. நல்லூர்த்தொகுதி எனக்குப்புதிய' தொகுதியாக இருந்தபோதிலும் எனக்களிக்கப்பட்ட பெரும்பான்மை வாக்குகள் சுதந்திரத் தமிழ் ஈழத்தைபெறுவதற்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குகளேயாகும். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளபடி நமது தமிழ் ஈழத்தின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோம்.''

### கதிரவேற்பிள்ளை

கோப்பாய்த் தொகுதியில் வெற்றியீட்டிய சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசியதாவது:—

''தமிழ் ஈழவிடுதலையை நோக்கி நாம் வீறு நடைபோடுவதற்கு தமிழ்பேசும் மக்கள் இத்தேர்தலில் ஏற்படுத்திய மகத்தான வெற்றி மூலம் வழிசெய்துள்ளனர். நாம் தமிழ்ஈழ விடுதலைக்காக நடாத்திய பொதுசன வாக்கெடுப்பின் பிரதிபலிப்பை இன்று உலகம் அறிந்து வியக்கும் வண்ணம் தமிழ் மக்கள் இத்தேர்தலை நன்கு பயன்படுத்தியுள்ளனர்.

### இராசலிங்கம்

உடுப்பிட்டித் தொகுதியில் புரட்சிகர வெற்றியீட்டிய திரு. த. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

''புதிய சரித்திரம் படைத்துவிட்ட உடுப்பிட்டித் தொகுதி மக்களே!

''சாதி, மதம், பிரதேசம் என்ற ரீதியில் பிரிக்கப்பட்டிருந்த தமிழ்பேசும் மக்கள் அனைவரும், ஒன்றுபடும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நம் இனத்தவர்களிடையேயுள்ள குறைபாடுகளை நீக்கினுல்தான் இன ஐக்கியத்தையும் இன விடுதலையையும் ஏற்படுத்த முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது. அந்த நம்பிக்கையை என்னை வேட்பாளராக நியமித்து வெற்றிபெறச் செய்ததன் மூலம் கூட்டணி தலைவர்கள் எடுத்துக்காட்டி விட்டனர்.

''தமிழ் மக்களுடைய வரலாற்றில் முக்கியத்துவம் பெறவேண்டிய புதிய சகாப்தம் ஒன்று இன்று உருவாக்கப்பட்டுவிட்டது. தமிழ் பேசும் மக்களிடையேயுள்ள பல்வேறு பிரிவினருக்குமிடையே இருக்கின்ற சந்தேகங்களை அகற்றி பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்தி, இன விடுதலைக்கான நடவடிக்கைகளில் வெற்றி பெறலாம் என்ற எண்ணத்திலேயே நான் இந்த நியமனத்தை ஏற்றேன்.

எனது வெற்றிக்காக தமது தொகுதியைத் தியாகம் செய்த திருவாளர்கள் ஜெயக்கொடி, மு. சிவசிதம்பரம் ஆகியோருக்கும் எனது வெற்றிக்காக ஓயாமல் ஒழியாமல் ஊணுறக்கமின்றி உழைத்த தந்தை செல்வாவின் மகன் சட்டத்தரணி சந்திரகாசனுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவர்களுக்கு தமிழ் சமுதாயம் என்றும் கடமைப்பட்டுள்ளது.''

ஊர்காவற்றுறைத் தொகுதியில் வெற்றியீட்டிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமதுரையில் கூறியதாவது:-

''கூட்டணியை பலவகையில் கண்டித்துவந்த சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினத்தின் தோல்வி, கூட்டணியே நாட்டு மக்களின் நம்பிக்கையைப்பெற்ற தமிழ் ஈழத்தின் ஒரேயொரு விடுதலை இயக்கம் என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டிவிட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமையின் கீழ் ஊர்காவற்றுறை தொகுதி மக்கள் தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் போராட தயார் என்பதை இத்தேர்தலின் மூலம் அறிவித்துள்ளனர்''

### யோகேஸ்வரன்

1947ம் ஆண்டு அருணுசலம் மகாதேவாவை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் தலைவர் அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் பெற்ற அமோகவெற்றிக்கு ஈடான முறையில் யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய வெற்றிபெற்ற திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:-

''தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தில் நான் ஓர் அச்சாணியாக இருப்பேன். தமிழ் இளைஞர்கள் இன்று தமிழ் ஈழவிடுதலையை நோக்கி மிகத்தீவிரமாக இயங்கிவருவதால் பொலிசார் அவர்களோடு மிக கண்ணியமாகவும் பொறுப்பாகவும் நடந்து கொள்ளவேண்டும்'' என்ருர்.

மானிப்பாய் தொகுதியில் வெற்றியீட்டிய வி. தர்மலிங்கம்பேசுகையில் ''தமிழர் விடுதலைக் கூட்டணி மீது தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீண்போகவில்லை,'' என்ருர்.

சாவகச்சேரி தொகுதியில் கூட்டணி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி வெற்ற திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

எனது தொகுதியில்என்னை எதிர்த்துப்போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்களான திரு. குமாரசாமி, திரு. மயில்வாகனன், திரு. சதா. நடராசா ஆகியோர் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்தே போட்டியிட்டிருக்கின்றனர். எனவே எனது தொகுதியில் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு எதிராக 289 வாக்குகளே கிடைத்துள்ளன. நாம் நடாத்தவுள்ள தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தாய்க்குலம் பெருமளவில் பங்கெடுத்துக்கொள்வதற்கான அறிகுறிகளைக்காண எல்லோருக்கும் வீர உணர்வு மேலிடுகிறது.'' என்ருர்.

கிளிநொச்சித்தொகுதியில் வெற்றியீட்டிய திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில் ''எமது உயிரைக்கொடுத்தாவது தமிழ் ஈழத்துைப் பெற்றுத்தான் தீருவோம். தேர்தலில் குமாரசூரியரின் கட்டுப்பணத்தை இழக்கச் செய்யமுடியாமற் போனதற்கு வருந்துகிறேன்'' என்ருர்.

வட்டுக்கோட்டையில் வெற்றியீட்டிய திரு. த. திருநாவுக்கரசு 'எதிரணியினர் எத்தகைய ஆத்திரமூட்டும் செயலில் இறங்கினுலும் எமது ஆதரவாளர்கள் எவ்வித வன்செயல்களிலும் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்'' என்ருர்.

# இந்திய விடுதலைக்கு உதவிய லெனினியக் கோட்பாடு

''தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை'' என்றகோட்பாட்டை லெனின் வகுத்தார்; சோவியத் யூனியனில் அது செயல்படுத்தப்பட்டது. தேச விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருந்த உலக மக்களுக்கு ஊக்கம் அளிக்கும் நிகழ்ச்சிகளாக இவை விளங்கின.

1929இல் 'பம்பாய் கிராணிகிள்' இவ்வாறு எழுதியது: ''எல்லா தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணயஉரிமை உண்டு என்ற சோவியத் அறிக்கையானது, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின்முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடன்றி, இந்தியாவுக்கும் அது பொருத்தமானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.''

அதே ஆண்டில் இந்தியப் புரட்சியாளர்களுக்கு லெனின் ஒரு செய்தி அனுப்பினுர்; ''தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் குடியரசால் பிரகடனம் செய்யப்பெற்ற சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளும், ஒடுக்கப்பெற்ற தேசிய இனங்கள் அன்னிய மற்றும் உள்நாட்டு முதலாளிகளின் சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பெற்ற நிகழ்ச்சியும், சுதந்திரத்திற்காக வீரப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் முற்போக்கான இந்தியர்களின் உளமார்ந்த ஆதரவைப் பெற்றுள்ளன'' என்று அச்செய்தியில் லெனின் கூறுகிருர்.

தேசிய இனங்கள் பற்றிய லெனினது வேலைத் திட்டமானது, அவரது பாட்டாளி வர்க்க புரட்சிகரக் கொள்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். பிரிந்து சென்று தமக்கென ஒரு சுதந்திர அரசை நிறுவும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை எல்லா தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதை அங்கீகரித்தால்தான், மக்களிடையே உண்மையான சமத்துவம் நிலவும் என்று லெனின் கூறினுர். மத, இன வேறுபாடு இன்றி எல்லா மக்களும் முழுச் சமத்துவம் பெறுவதற்கு இந்த உரிமை வகை செய்கிறது.

சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருந்த கீழை மக்களுக்கு இந்த லெனினியத் திட்டம் மிக முக்கியமானதாக விளங்கியது. அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் ஆற்றல்வாய்ந்த ஆயுதத்தை இது அளித்தது: கோடிக் கணக்கான மக்களின் சுதந்திரப்பாதையில் ஒளி விளக்காகத் திகழ்ந்தது.

1918இல் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பேசிய மதன் மோகன் மாளவியா இவ்வாறு கூறினுர்: இந்திய மக்களின் பிரதிநிதிகள் வெளியிட்டுள்ள பிரேரணைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்க வேண்டும்; இந்தியாவில் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை அமுல் நடத்த வேண்டும்.''

இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு பேசிய ஜவஹர்லால் நேரு, ''சோவியத் ரஷ்யாவில் சிறுபான்மையோர் பிரச்சினை, பெருமளவில் தீர்க்கப்பட்டுவிட்டது. ஆனுல் பிரிட்டிஷ் அரசு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை'' என்ருர்.

இவ்வாருக, 1917அக்டோபர் புரட்சியின் ஆரம்ப ஆண்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைமை மறப்போம்!

# பணி தொடருவோம்!!

**அன்பு நண்பா,**

வெற்றியெட்டுத்திக்கு மெட்டக்கொட்டுகிறது விடுதலை முரசம்; சுற்றி நில்லாதே போ பகையே — சுதந்திர வீறுபெற்றெழுந்தார் ஈழத்தமிழ் மாந்தர் என முழங்குகிறது முழவொலி! எங்கள் தமிழினத்தார் இணைந்தனர் ஒன்ருய் — சாதியும் சமய வேறுபாடும் சடசடென சரிந்து விழுந்தன — பேதங்கள் போக்கி பெருமனதால் ஒன்றுபட்டார்—ஆகாதது இனி நாம் அடிமையாய் வாழ்ந்திடுதல்—கூறுநூறு செய்திடினும் குலம் காப்போம்—நிலம் காப்போம் — தமிழ்ஈழம் மீட்போம் என்று சங்கெடுத்து முழங்குகின்றனர் தங்கத் தமிழர்கள்! கோவில் மணியோசை, குயில் இனத்தின் குரலோசை, காளையரின் வெடியோசை, கன்னியரின் வளையோசை — அனைத்தும் விடுதலை விடுதலையென்றே முழங்குகின்றன தமிழ்ஈழத்தின் மூலைமுடுக்கெங்கும்!

**ஆம் நண்பா, ஆடி இருபத்தோராம் நாள் நடைபெற்ற தேர்தலில் தமிழ்ஈழத்தின் விடுதலைப் பேரியக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி ஈட்டிய மகோன்னதமான வெற்றி கண்டு உள்ளம் பூரித்திட; மகிழ்ச்சியில் திளைத்திடாததமிழன் எவனும்இருக்க முடியாது. அப்படி மகிழ்ச்சியடையாதவன்' உண்மையில் தமிழனுகவும் இருக்க முடியாது.**

ஆம்—400 ஆண்டு காலமாக அந்நியனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் நம் தமிழ்ப்பூமியை —முப்பது ஆண்டுகளாக சிங்கள ஏகாதிபத்தியத்திஞல் சர்வதேச சட்டங்களுக்கு விரோதமாக அடக்கி ஆளப்பட்டுவரும் நம் அருமைத் தமிழ் ஈழத்தாயகத்தை—மீட்டேயாகவேண்டும்; அதில் நம்முடைய அரசை நிறுவியே தீரவேண்டும்; அங்கு உதயசூரியன் கொடியை ஓங்கிப் பறக்கவிட்டேயாகவேண்டும்; அடிமை இருளைத்துடைத்து சுதந்திர சூரியனின் ஒளியில் குளித்தே தீரவேண்டும் — என்று தீர்க்கமாக, திட்டவட்டமாக எந்தவித ஐயத்துக்கும் ஆயாசத்துக்குமிடமின்றி — தெளிவான தீர்ப்பினை—ஆடி 21ம் நாள் ஜனநாயகக் களத்தில் வெளிப்படையாக வழங்கியிருக்கிருர்கள் தமிழ் மக்கள்!

**இந்தப்புனிதமான விடுதலைப்போராட்டத்தைக்கொண்டு நடத்தக்கூடிய அறிவும் ஆற்றலும், அறவழியில் நம்பிக்கையும், தியாக உணர்வும், கொள்கைப்பிடிப்பும், இலட்சிய விசுவாசமும்கொண்ட வீரர்களின் கோட்டம்** —ஒரே விடுதலைப் பாசறை—சாதி, மத, பிரதேச பேதமற்ற மாபெரும் மகோன்னதமான தமிழ் தேசிய சுதந்திர இயக்கம் — மறைந்த மூதறிஞர் தந்தை செல்வா அவர்களும், அமரர் ஜீ. ஜீ. அவர்களும் தலைமை தாங்கி வழி நடத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றேயொன்றுதான் என்பதை உணர்ந்து, கூட்டணியிடமே தங்கள் தலைவிதியை நிர்ணயிக்கின்றபொறுப்பை — தமிழ் சமுதாயத்தை தலைமை தாங்கி விடுதலைப் பாதையில் அழைத்துச்செல்கின்ற காத்திரமான பாரிய பொறுப்பை —மிகுந்த நம்பிக்கையுடன் ஆடி 21ம் நாள் சிந்தாமல் சிதருமல் ஒப்படைத்திருக்கிருர்கள் தமிழ் மக்கள்!

**தனித் தமிழ் ஈழம் அமைப்பதே தமிழ் தேசிய இனத்தின் ஒரே குறிக்கோள் என்று எதுவித சந்தேகத்துக்குமிடமின்றி தெளிவாக தீர்ப்புவழங்கியிருக்கின்ற தமிழ் மக்கள், அந்தப் புனிதபோராட்டத்தை கொண்டு நடத்தி, இலட்சிய பூமிக்கு தம்மை பத்திரமாக அழைத்துச்செல்லுகின்ற பொறுப்பை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கைகளில் ஒப்படைத்திருக்கிருர்கள்**

கூட்டணியின் ஒற்றுமையைக் குலைக்க முயன்ற கோடரிக்காம்புகளை இருந்த இடம் தெரியாமற்செய்து — தமிழினத்தை குறுக்கு வழியில் அழைத்துச்சென்று கொலைசெய்ய முயன்றவர்களின் முதுகெலும்பை முறித்து—சுய இச்சை சந்தர்ப்பவாதிகளுக்கு கசையடி தந்து — கடந்த ஏழு ஆண்டுகளாக இனத்தை விற்று வயிறு கழுவிய துரோகிகளின் இடுப்பையொடித்து—சிங்களக் கட்சிகளின் ஏமாற்றுப் பிரசாரங்களில் கிஞ்சிற்றும் மயங்காது — மிகவும் தெளிந்த அரசியல் சிந்தனையுடன் துணிவாக இந்தத்தேர்தலில் தமிழ் மக்கள் தந்திருக்கின்ற தீர்ப்பு தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே ஒரு திருப்புமுனையாகும்—மறக்கமுடியாத ஒரு பொன்னேடாகும்!

தனிவழி போவதே நம்வழி; அதற்கு இன ஒற்றுமை என்ற 'டார்ச் விளக்கு' ஒன்றே நமக்குத் துணை; அந்த 'டார்ச்' விளக்காக விளங்கிடுவது — ஒற்றுமையின் எடுத்துக்காட்டாக திகழ்ந்திடுவது கூட்டணியொன்றே; தமிழினத்துக்காக தம் இறுதி மூச்சுவரை உழைத்த மூதறிஞர் தந்தை செல்வா தமிழ் சமுதாயத்துக்கு இறுதியாகத் தந்துவிட்டுச் சென்ற ஒளிவிளக்கு கூட்டணியொன்றே; இந்த விளக்கின் ஒளியைப் பயன்படுத்தியே தமிழ் ஈழத்தை மூடியிருக்கின்ற இருளைப் போக்கிட வேண்டும்—இந்த ஒற்றுமையை எதிர்ப்போர் —ஒற்றுமைக்கு ஊறுதேட முனைவோர்—தமிழினத்தின் ஐந்தாம் படையினரே என்பதை உணர்ந்து, அவர்களை ஊதித்தள்ளி இதை உணராத மற்றவர்களுக்கும் உணர்த்தியிருக்கிருர்கள் தமிழ்மக்கள்—இந்தத் தேர்தலில்!

**கடந்த ஏழு ஆண்டுகளாக சிறிமா அம்மையாருக்கு சிந்துபாடி — செந்தமிழ் இனத்தை காட்டிக்கொடுத்து, சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு குற்றேவல் புரிந்து, புதிய சிங்கள அரசியல் சட்டத்துக்கு கையெழுத்திட்ட குமாரசூரியர், அருளம்பலம், தியாகராசா, மார்ட்டின், இராசன் செல்வநாயகம் போன்ற அரசியல் குப்பை கூளங்கள் எல்லாம் ஆடி 21ல் தமிழ் ஈழத்திற் சுழன்று வீசிய ஜனநாயகச் சூருவளியில் அள்ளுண்டு செல்லப்பட்ட பரிதாபவரலாறு—வருங்காலத்தில் தமிழினத்தின் அபிலாஷைகளுக்குவிரோதமாக சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடி நக்க இருப்போருக்கு ஓர் பாடமாக அமைய வேண்டும்!**

## அரசியல் மடல்

நடைபெற்ற தேர்தலில் — சில கூட்டணி வேட்பாளர்களின் மீதுள்ள தனிப்பட்ட குறைபாடுகளை — அவர்களது கடந்தகால குற்றங்குறைகளை — அடியோடு மறந்துவிட்டு கூட்டணியையும், அதன் தமிழ்ஈழ இலட்சியத்தையும் இன ஒற்றுமையையுமே மனதில் கொண்டு —கூட்டணி நியமித்த வேட்பாளர்களுக்கு வாக்குகளைக் குவித்து பெருவெற்றி தேடித் தந்து இருக்கிருர்கள் தமிழ் மக்கள். தமிழ் மக்களின் இலட்சிய உறுதிக்கும், 'கூட்டணி, தமிழ்ஈழம்' என்கிற வார்த்தைகளுக்கு அவர்கள் தருகின்ற பெருமதிப்புக்கும் இஃது ஓர் உதாரணமாக விளங்குகிறது!

1947ம் ஆண்டுப்பொதுத்தேர்தலில் தமிழ் காங்கிரஸ் பிளவுபடாமலிருந்தபோது—யாழ்ப்பாணத் தொகுதியில் 'ஒத்துழைப்பு' கொள்கை பேசிய அருணுசலம் மகாதேவாவை, அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அன்று தோற்கடித்து, தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று முழங்கிய அந்த எழுச்சிமிகு காலகட்டத்தை 30 ஆண்டுகள் கழித்து இலட்சிய வீரர் யோகேஸ்வரனுக்கு வெற்றியீட்டிக் கொடுத்ததன்மூலம் யாழ் தொகுதி மக்கள் இன்று [illegible] 1947ல் [illegible] அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் எடுத்த அதே அளவு பெரும்பான்மை வாக்குகளை—ஜீ. ஜீ.க்குப் பின்னர், யாழ் தொகுதியில் இன்று எடுத்திருப்பவர் இளஞ்சிங்கம் யோகேஸ்தான்! இதேபோல, மன்னுரை மீட்டெடுத்த மானவீரர் சூசைதாசன், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய எல்லைப் பிரதேசங்களை கைப்பற்றிய சிவசிதம்பரம், செல்லத்தம்பு, திருகோணமலையில் அங்குலமும் இனி நான் அந்நியர்கள் ஆள விடேன் என முழங்கும் சாதனைவீரர் சம்பந்தர், பட்டிருப்புத் தொகுதியை இயக்கக் கோட்டையாக மாற்றியமைத்துள்ள கணேசலிங்கம், — இவர்களது வெற்றியெல்லாம் நெஞ்சினிக்க வைக்கிறது என்ருலும், கூட்டணியின் வெற்றிக் கிரீடத்தில் வைரமாக ஜொலித்துக் கொண்டிருப்பது உடுப்பிட்டித் தொகுதி ஈட்டித்தந்த ஈடிணையற்ற வெற்றிதான்!

இதுவரை யாரும் நினைத்திராத —யாரும் செய்யமுடியாத யாரும் செய்யவிரும்பாத— ஒரு மகத்தான சாதனையை உடுப்பிட்டித் தொகுதியில்கூட்டணி சாதித்திருக்கிறது. தமிழ் சமுதாயத்தின்வளர்ச்சிக்கும்வாழ்வுக்கும்இகழ்ச்சியாகி—தமிழ் சமுதாயத்தைவேரோடு அரித்துக்கொண்டிருக்கும் தீண்டாமைக்கொடுமையை— சாதிச் சனியனை வேரோடு கொன்றெழித்து—சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சாதியைக் காட்டி கூட்டணியைதோற்கடித்து வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொள்ளத் திட்டமிட்ட எட்டப்பர்களை குட்டியடக்கி— இராசலிங்கம் அவர்களுக்கு பெருவெற்றியீட்டிக்கொடுத்து வரலாற்றிலும் உலகெங்கும் வாழும் தமிழ் சமுதாயத்தின் உள்ளத்திலும் அழியா இடத்தை பெற்றுக்கொண்டிருக்கிருர்கள் உடுப்பிட்டித்தொகுதி மக்கள்!

நாளை மலரும் தமிழ் ஈழத்தில், தீண்டாமையும் சாதிக்கொடுமைகளும் அறவே இருக்காது; பாகுபாடுகளும் துவேசமும் இருக்காது; சமதர்மம் நிலவும்; ஆட்சியில் அனைவரும் பங்கேற்கமுடியும்என்ற நம்பிக்கையையும்தெம்பையும் தமது செயல் மூலம் சிறுபான்மைத் தமிழ் சகோதரர்களுக்கு உணர்த்தி — அவர்களையும் தமிழ் ஈழவிடுதலைப்போராட்டத்தில் இணைத்து வைத்திருக்கும் உடுப்பிட்டி தொகுதி வாக்காளர்களின் செயல்வீரத்தை என்னென்பேன்! **இராசலிங்கத்தின்வெற்றிக்கு ஓயாது உழைத்த இளைஞர்களும் இளம்பெண்களும் தமிழ்சமுதாயத்தின் நன்றிக்குரியவர்கள்!**

**நடைபெற்ற தேர்தலில், தமிழ் ஈழத்தின் 18தமிழ்தொகுதிகளில் மொத்தமாக 5,58,319 வாக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இதில் தமிழ் ஈழக்கொள்கையை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் கூட்டணிக்கு 3,71,010 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. தமிழ் ஈழத்தையே தனது குறிக்கோளாகக் கொண்ட சுயாட்சிக் கழகம்பெற்ற வாக்குகள் 10,740.** பருத்தித்துறை முல்லைத் தீவு, சாவகச்சேரி, மன்னுர்தொகுதிகளில் போட்டியிட்ட தமிழ் ஈழத்தை ஆதரித்த சுயேச்சைகள் ஐந்து பேர் (வீரவாகு, சந்திரசேகரி குமாரசாமி, சதாநடராசா, ஜோன்மார்க்) பெற்ற வாக்குகள் 23,021, ஆக, தமிழ் ஈழத்துக்கு கிடைத்த வாக்குகள் 4,04, 031இது முழுமையாகப்பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 77சத விதமானதாகும்!

**ஆம், 21-7-77ல் நடைபெற்றசர்வஜனவாக்கெடுப்பில்—77சத விதமான தமிழர்வாக்குகள் — வடக்கு கிழக்கு மாகாணங்களில் — அதாவது தமிழ்ஈழத்தில் தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவாக கிடைத்திருக்கின்றன. இந்த உண்மையை யாரும் மறைத்துவிட முடியாது! தமிழ் ஈழ பிரிவினைக்கு தமிழ் ஈழ மக்கள்காட்டிய 'பச்சை விளக்கு' இதுவாகும்.**

சிங்கள சிறீலங்கா மக்கள் தமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எப்படி ஐக்கிய தேசியக்கட்சியிடம் ஒப்படைத்திருக்கிருர்களோ— அதேபோல தமிழ் ஈழ மக்கள் தமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை — தமிழர்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனக்குக் கிடைத்த வெற்றி தமிழ் ஈழக் கொள்கைக்கு கிடைத்த வெற்றி!"

— இராசதுரை

# "தேசியபேரவைகதவுகள் அடைக்கப்பட்டாலும் சிறைக் கதவுகள் எனக்காக காத்திருக்கின்றன"

—காசி ஆனந்தன்



**மட்டக்களப்புதொகுதியில் எனக்குக் கிடைத்த வெற்றி எனது தனிப்பட்ட வெற்றியல்ல; இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் தந்தை செல்வா அவர்களது கொள்கையாகிய 'சாதி மத பிரதேச பேதமற்ற சமதர்மத் தமிழ்ஈழம்' அமைப்பதற்கான அங்கீகாரத்தை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அளித்து விட்டார்கள் என்பதே எனது வெற்றியின் தத்துவமாகும்!"**

மேற்கண்டவாறு மட்டக்களப்புத்தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் வாக்காளர்களுக்கு நன்றிதெரிவித்துப்பேசிய திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார். திரு. இராசதுரை 26,648 வாக்குகள் பெற்று வெற்றியீட்டினர்.

## காசி ஆனந்தன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மற்ருேர் வேட்பாளராகப்போட்டியிட்டு 22,443 வாக்குகள்பெற்று வெற்றி வாய்ப்பை இழந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அங்கு உற்சாகத்துடன் உரையாற்றினுர். அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

"1972ம் ஆண்டு புதிய சிங்களக்குடியரசு வந்த நாளிலிருந்து ஈழப்போராட்டத்திலீடுபட்டுநாலரைஆண்டுகள் வெலிக்கடைச் சிறைக்குள் இருந்தேன். வெளியே வந்ததும் தேர்தலில் போட்டியிடுமாறு கூட்டணி தலைமை எனக்கு கட்டளையிட்டது. மட்டக்களப்பு தொகுதியில் இயக்கத்தை வேகம் அடையச் செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இத்தேர்தலில் போட்டியிட்டேன் இப்போது பாராளுமன்றக் கதவுகள் எனக்கு மூடப்பட்டாலும், சிறைச்சாலையின் கதவுகள் எனக்காகக் காத்திருக்கின்றன என்பதை நான் அறிவேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எனது கடமையை தூய்மையுடன் எப்போதும் ஆற்றிவருவேன் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்கு உறுதுணையாக நின்று உழைத்த ஆதரவாளர்களுக்கும் எனக்கு வாக்களித்தோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."


## கணேசலிங்கம்

பட்டிருப்புத் தொகுதியில் 10,800 அதிகப்படி வாக்குகளால் வெற்றியீட்டிய திரு. பூ. கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

"பட்டிருப்புத் தொகுதியில் கூட்டணி சார்பில் போட்டியிட்ட என்னை எதிர்த்து, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரி ஐக்கிய முன்னணி என்ற மூன்று சிங்களக் கட்சிகளும் போட்டியிட்டனர். மூன்று சிங்களக் கட்சிகளையும் பட்டிருப்பு மக்கள் தூக்கியெறிந்துவிட்டு, தந்தை செல்வாவழியில் தமிழ்ஈழம் காணப் போராடும் கூட்டணியைச் சேர்ந்த எனக்கே வெற்றிமாலை சூட்டியுள்ளனர் என்ருல்—தமிழ்ஈழக் கொள்கை வெற்றிபெற்றுவிட்டது என்பதே அர்த்தம்."

## சம்பந்தமூர்த்தி

கல்குடாத்தொகுதியில் 505வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்த கூட்டணி வேட்பாளர் சம்பந்தமூர்த்தி பேசுகையில் கூறியதாவது:-



"இத்தேர்தல் முடிவை நான் கண்ணியத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனுல் தோல்வியைக் கண்டு தொடை நடுங்குபவர்களோ வெற்றியைக் கண்டுவெறிபிடித்து அலைபவர்களோ நாம் அல்ல; தமிழர் விடுதலை கூட்டணியின்கொள்கைகளை நாம் வருங்காலத்திலும் பின்பற்றி அதன் இலட்சியங்களுக்காக உழைப்போம். களத்திலிருந்து நாம் ஓடப்போவதில்லை!"

---

## எதிர்க்கட்சித்...

—1-ம் பக்கத் தொடர்

கட்சித் தலைவர் என்ற முறையில் அவரை வெளிநாட்டு ராஜதந்திரிகள், வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அடிக்கடி சந்திப்பார்கள். வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்படும்; வெளிநாடுகளுக்கு செல்லும் சந்தர்ப்பங்களும் ஏற்படும்; எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு திரட்ட முடியும்; ஆகவே தானுக வருகின்ற சந்தர்ப்பத்தை இயக்கத்துக்கு பயன்படுத்திக்கொள்ளாமல் ஏன் வீணுக விடவேண்டும் என்பது கூட்டணியிலுள்ள அனுபவஸ்தர்களின் கருத்தாகும்.

கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளபடி தமிழ் ஈழத்தேசிய சபையை நிறுவி, தமிழ் ஈழத்துக்கு தனியான அரசிலமைப்பை ஏற்படுத்தும் பொழுது சிங்கள அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்காது; கூட்டணித் தலைவர்களை நிச்சயம் கைதுசெய்து இராஜத்துரோகக் குற்றம் சாட்டவே செய்யும்; அப்போது கூட்டணித் தலைவர் எதிர்க்கட்சித்தலைவராகவும் இருந்து கைதுசெய்யப்படுவதனுல், தமிழ் ஈழப்போராட்டம் உலகின் கவனத்தை மேலும்ஈர்க்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்றும் அபிப்பிராயம்தெரிவிக்கப்படுகிறது.

அதே நேரத்தில் தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைமையை கூட்டணி ஏற்பதன் மூலம், தன்னை வெறுமனே ஒரு பாராளுமன்றக் கட்சி ஆக்கிக்கொள்ளாமல், எதிர்க்கட்சிப்பொறுப்பை ஏற்காமல் தமிழ் ஈழப்போராட்டத்தை தேசிய பேரவைக்கு வெளியே தீவிரமாக நடத்த வேண்டும் என்பது இன்னும் சிலரது அபிப்பிராயமாகும்.

எது எப்படியிருந்த போதிலும், தேசிய பேரவையில் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை கூட்டணி ஏற்கும் பட்சத்தில், இதுநாள் வரை பின்பற்றப்பட்டுவந்த மரபுகளையும், சம்பிரதாயங்களையும் கூட்டணி தூக்கியெறிந்துவிட்டு, பேரவையில் ஒரு புதிய புரட்சியை கூட்டணி ஏற்படுத்தும் என்று தெரியவருகிறது.

அதாவது எதிர்க்கட்சித் தலைமைபதவியில் இருந்துகொண்டு — அதே சமயத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளையும், தமிழ்ஈழ விடுதலைக் கோரிக்கையையும் மட்டுமே பேரவையில் கூட்டணி வலியுறுத்திப் பேசும்; ஏனைய பிரச்சினைகளில் கூட்டணி அக்கறையெடுக்காது புறக்கணிக்கும்; இப்படிச் செய்வதன் மூலம் வழமையான சம்பிரதாயங்களையும் மரபுகளையும் உடைத்தெறிந்து ஒரு புரட்சியை கூட்டணி ஏற்படுத்தலாம் என்றும் கூறப்படுகிறது.

## எம்.ஜி.ஆர்-கருணா...

—1-ம் பக்கத் தொடர்

தமிழக சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரும், தி.மு.க. தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசனுக்கு ஊடாக திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு பின்வரும் வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

Extremely glad to know about your success. and your partys sncccss in election Please accept my hearty congratulation. DMK greets the victory. (தேர்தலில் நீங்களும், உங்கள் கட்சியும் அடைந்துள்ள வெற்றியறிந்து மகிழ்ச்சியில் மிதக்கிறேன். எனது இதய வாழ்த்துக்களை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள். திமுகழகம். உங்கள் வெற்றியைப் பாராட்டுகிறது.)

மக்கள் தி.மு.க. தலைவர் இரா. நெடுஞ்செழியனும், சிலம்புச் செல்வர் ம. பொ. சியும் இதே மாதிரியான வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர்.

கடல் கடந்த நாடுகளிலிருந்து நாள்தோறும் வாழ்த்துச் செய்திகள் கூட்டணிக்கு வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. லண்டன் ஈழத்தமிழர் கழகம், ஈழ விடுதலை முன்னணி ஆகிய இரண்டு இயக்கங்களும் கூட்டணி வெற்றிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்திருப்பதுடன், வெற்றி வாய்ப்பை இழந்த கூட்டணி வேட்பாளர்களையும் உற்சாக மூட்டியுள்ளன.

மலேசியாவில் வாழும் ஈழத் தமிழர்கள் சார்பில், திரு. எஸ். ரி. தம்பியையா, சுதந்திரன் ஆசிரியருக்கு அனுப்பிவைத்திருக்கும் வாழ்த்துத்தந்தியில், கூட்டணியின அமோக வெற்றிக்கு காரணமாக இருந்த கூட்டணித் தலைமையையும், சுதந்திரன் ஏட்டையும் பாராட்டியுள்ளார்.

தமிழ் நாடு நாகர் கோவிலிலிருந்து வண. பிதா பொர்ஞண்டோ கூட்டணி வெற்றி குறித்து அனுப்பிவைத்துள்ள வாழ்த்துத் தந்தியில்— "நல்ல வெற்றி கூட்டணி நடத்தும் விடுதலைப் போராட்டத்துக்கு இறைவன் ஆசி வழங்கட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய விடுதலைக்கு...

—3-ம் பக்கத்தொடர்

டுகளிலேயே, "தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை" என்ற லெனினியக் கோட்பாடு இந்தியாவில்பிரபலம் அடைந்துவிட்டது. ஏகாதிபத்திய சித்தாந்தத்திற்கு எதிரான போராட்டத்தில் ஓர் ஆயுதமாக இந்திய தேசபக்தர்கள் அதைப் பயன்படுத்தினர்.

**சுதந்திரன்**

**(வாரம் இருமுறை) சந்தா விபரம்**

ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — „ 25.00

**சுடர்**

(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா. 12.00

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்

194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையைச் செய்தனர் ஈழத் தமிழர்கள் — இனி விடுதலைப் போர் வெடித்துக் கிளம்பட்டும்

## வாக்களித்தவர்கள் வேலை முடிந்தது வாக்குப் பெற்றோருக்கு இனியே வேலை!

**தமிழர் விடுதலை கூட்டணி வென்றது வெற்றி வாகை சூடியது! வீரர் வென்றனர்! துரோகம் புரிந்தோர் தூக்கி எரியப்பட்டனர்! சேதிகள் கேட்கக் கேட்க தேனாக இனிக்கிறது! வென்றார் மட்டுமா? தமிழர் ஒன்றானார்கள்—வாக்குகள் அதிகம் பெற்றனர்—என்பதுமட்டுமா? போக்கற்றவர்கள் இவர்கள் என்று ஏளனம் பேசியவர்களுக்கு, ஈழத் தமிழர்கள் பதில் தந்தனர்.**

உழைத்த உழவனுக்கு—வயல்வெளியில் கதிர் மணிகள் குலுங்கினால்தானே குதூகலம்! பாடுபட்டவனுக்கு பட்டபாட்டிற்குப் பலன் கண்டால்தானே களிப்பு—

தந்தையை இழந்தோம்! ஆனால் அவர் இருந்திருந்தால் ஆனந்தக் கண்ணீரல்லவோ வடித்து வாழ்ந்திருப்பார்—என் தம்பி அமிர் வழி நடத்த வல்லவன் என்றல்லவா போற்றியிருப்பார். அவர் சென்றமுறை போகாததால்—அவரும் இருந்திருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருக்கும் என அனைவரும் எண்ணினர். அந்த ஏக்கம் போக்கிட, • தமிழ் மக்கள் அவர் பின் இருப்பதை உணர்த்திட இருபத்தையாயிரத்திற்கும் அதிக வாக்குகளைவாரித்தந்தனர்—காங்கேசன்துறை தங்கத் தமிழர்!

சீர்மிகு சிவசிதம்பரமும், சிந்தனைச்சிற்பி கதிரவேலுப்பிள்ளையும், கன்னித் தமிழ் காவலர் கா. பொ. இரத்தினமும், தர்மம் வெல்லும் எனும் சொற்களின் விளக்கமாய் தர்மலிங்கமும், துரைத்தனம் போல் ஆண்டவர்களைத் துரத்திய துரைரத்தினமும், கருந்தாடிக் காவலர் ரத்தினமாம் நவரத்தினமும் இனி தமிழருக்கு யோகம் வந்தது என யோகேஸ்வரனும் சுதந்திரம் என முழங்க சூசைதாசனும் இனி ஆளும் சிங்களவரோடு எந்த சம்பந்தமும் இல்லை எனச்சொல்ல சம்பந்தனும், குறுக்கு வழியில் நுழைந்தோருக்கு குட்டியதுபோல் வென்று தமிழர்களை ஆனந்தப்படுத்திய ஆனந்தசங்கரியும், ஈழத் தமிழ்நாடு ஐ. நா.வில் அங்கம் வகிக்கும் நாளைக் காண உழைக்க கணேசலிங்கமும், இராசலிங்கமும் நாவன்மையால் நமது நிலை விளக்கிடுவோம் என திருநாவுக்கரசும் — இராசதுரையும் —இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழர் என்ற வேற்றுமை என்றோ மறைந்தது என உலகிற்கு உணர்த்தத் தொழிலாளர் திலகம் தொண்டைமானும் — தேசியப்பேரவைக்குள் நுழைவதை எண்ணிப் பெருமைப்படுகிறேன் — அதே வேளையில்— சென்னைத் தெருக்களில் எத்தனையோ நாட்கள் ஈழத்தை நினைத்து ஏக்கப் பெருமூச்சே பதிலாய் கண்ட கவிஞன்—தன்னை நினையான் தன்குடும்பத்தை நினையான் ஈழநாடு ஒன்றையே எண்ணிடுவான் — நான் அவன்— அவன் நான் எனும் அன்பு நண்பர் கவிஞர் காசி ஆனந்தன் தேசியப்பேரவை நுழையும் வாய்ப்பை இழந்ததை எண்ணி எண்ணி வேதனையும் படுகிறேன்.

ஈழத் தமிழர் வெற்றியை என் மனக்கண்முன் எண்ணிப் பார்க்கிறேன் — என் முன் கண் பார்வை கிட்டாதோ என ஏக்கத்தோடு வந்து ஏமாற்றத்தோடு திரும்பும் நண்பர் கே. வி. மகாதேவனையும் எண்ணுகிறேன் — நானும் அவரும் அதில் ஒன்றுதான்! அண்ணன் 'அமிர்' அவர்களை ஆதரித்துப்பேசி பின் இங்கு வந்த அவர் — இப்போது வெற்றிவிழாவில் கலந்து கொள்வார் என் வாழ்த்தையும் தெரிவிப்பார்.

நாளைய பொழுது மலரும் —நல்லதாய் விளையும் — சொந்த நாட்டில் வாழ, கல்வி கற்க, உழைக்க வழியற்று பாசம் நிறைந்த பெற்றோரைப் பிரிந்த, உற்ற தோழர்களை நாட்டு, உறவை மறந்து, உலகின் பல பகுதியிலும் பரவிக் கிடக்கும் நமது இளைஞர்கள் ஈழம் என்று காண்போம் எனும் ஏக்கம் போக்க உழைப்போம்—உருவாகட்டும் திருநாடு!



தேர்தல் ஒரு கட்டம்! உலகிற்கு நமது வலிமை கூட்டிவிட்டோம்— வேலை முடிந்துவிட்டதா? இல்லை இனித்தான் — வாக்களித்தவர்களுக்கு வேலை முடிந்திருக்கலாம். வாக்குப்பெற்றவர்களுக்கு வேலை இனித்தான் ஆரம்பம்!

**டாக்டர் இரா. சனர்த்தனம் எம். ஏ**

தமிழ் உலகம் உங்களிடம் நிரம்ப தென்படுகிறது! அண்ணன் 'அமிர்' வழியில்— செல்வா அறிவுரைப்படி— செயல்பட சிங்கத் தமிழா புறப்படு — சீர்மிகு ஈழத்தைக் கண்டிடு! இல்லையெனில் செத்து மடிதல் முடிவாகட்டும்!

## எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| நெஞ்சம் நிறைந்த தம்பி —கோவை மகேசன் | 2-00 |
| தெருப்புலவர் சுவர்கவிதை —கவிஞர் காசி ஆனந்தன் | 1-00 |
| இலங்கையில் தமிழர் உயர்கல்வி —பேராசிரியர் ஹிலறி குறூஸ் | 2-00 |
| இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா —டாக்டர் இரா. சனர்த்தனம் —ஆ. இராசரத்தினம் (எல்லாளன்) | 1-00 |
| அனைத்துலக நீதிச்சபைமுன் இலங்கை தமிழர் பிரச்சினை —தமிழர் கூட்டணி அறிக்கை | 2-00 |
| தடுப்புக்காவலில் பத்து நாட்கள் —கா. பொ. இரத்தினம் பா. உ. | 1-00 |
| தமிழன் சிந்திய இரத்தம் 1958ல் நடந்தஇனக்கலவரம்பற்றியது —நாவண்ணன் | 1-50 |
| துரோகிகளே தூரவிலகுங்கள் —கோவை மகேசன் | 2-50 |
| ஏன் வேண்டும் தமிழ் ஈழம்? | 2-00 |
| புத்தளத்தில் இரத்த களம் (புத்தளம் 1976 முஸ்லிம்—சிங்களவர் கலவரம் பற்றியது) —நாவண்ணன் | 3.00 |

V. P. P. ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தபால் செலவு சதம். 60

சுதந்திரன் வெளியீட்டகம்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

## சாதியை அடியோடு சாகடித்தனர் உடுப்பிட்டி தொகுதி மக்கள்

### கொள்கைக்கே வாக்களிக்கும் புதிய மரபை உருவாக்கியது கூட்டணி!

தமிழர் விடுதலைக் கூட்டணி. அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஈட்டிய வெற்றிகள் அனைத்தும் மகிழ்ச்சியைத் தருவனவாகவும் தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை எடுத்துக்காட்டுவனவாகவும் விளங்குகின்றன. உடுப்பிட்டியில் நாம் ஈட்டிய வெற்றி. இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. காரணம் உடுப்பிட்டியில் நாம் இரு பெரு வெற்றிகளை ஈட்டியுள்ளோம். சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உரிமைக் குரல் எழுப்புகின்ற தமிழ் இனம் தமக்குள் இருக்கும் ஒரு பகுதியினருக்கு உரிமை வழங்க மறுக்கின் நாம்எழுப்பும் உரிமைக்குரலைக் கேட்டு உலகம் எள்ளிநகையாடும்.

முதலில் எம்மை நாம் தூய்மைப்படுத்திக்கொண்டு அரசியல் விடுதலைக்குப் போராடினால் எம்மவர் அனைவரும் ஒன்றுபடமுடியும். மாற்றாரும் எம்மை மதிப்பர்.

சாதி என்ற சொல்லே தமிழில் இல்லாத ஜாதி என்ற வட சொல்லின் திரிபாகும். அதை எம்மொழியில் திணித்ததோடு எம்இனத்தின் மீதும் திணித்து அதற்கு அடிமையாக இதுவரை இருந்தோம். உடுப்பிட்டித் தொகுதியில் சாதிவெறியை நாம் சாகடித்ததோடு தமிழ்ஈழக் கோரிக்கையையும் உலகெங்கும் கேட்கும் வகையில் ஓங்கி ஒலித்துள்ளோம். எம் வேட்பாளர் திரு. இராசலிங்கத்தை எதிர்த்து எட்டு வேட்பாளர்கள் போட்டியிட்டும் அதில் தருமரத்தினம் என்பவர் சமசமாஜக் கட்சியை விடுத்து சாதி வெறிக்கு கட்சி கட்டிய பொழுதும் படுதோல்விகண்டார். தமிழ் இனத்தின் சமுதாய விழிப்புணர்ச்சியை இது எடுத்துக்காட்டுகிறது.

சீன கம்யூனிஸ்ட் உட்பட தமிழ் முற்போக்கு சக்திகள் என்று கூறும் சிலர் சாதியை வைத்துக்கொண்டே வியாபாரம் காண முயன்ற போதும் எம் உடன் பிறப்புக்களான சிறுபான்மை மக்கள் இம்மாய வலையில் சிக்க மறுத்தது தமிழ் சமுதாயத்தோடு ஒன்றிச்செயல்பட வேண்டும் என்ற அவர்களின் உயர் எண்ணத்தையும் இவ்வெற்றி உணர்த்தி நிற்கின்றது.

தீண்டாமை எனும் தீய வழக்கு தீரத்தொலைந்திட நாளாச்சு! இந்த வழக்கம் நாளுக்கு நாளாய் இந்து மதத்தினை மட்டுமல்ல செந்தமிழ் இனத்தையும் சீரழிக்கின்றது என்பதனை உடுப்பிட்டி வாழ் மக்கள் உணர்ந்து உணர்த்திய பாங்கு எம் உள்ளத்தில் உவகை பெருக்காகத் தருகிறது.

— ஈழவேந்தன்.

### அக்கரைப் பற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை

பொத்துவில் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. எம். கனகரெத்தினம் அவர்களால் அக்கரைப்பற்று-7 ஆலையடி வேம்பு வீதியில் ஒரு கூட்டணி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் அதன் நிருவாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: நா. அழகரெத்தினம்; உப தலைவர்: த. ஏகாம்பரம்; நிர்வாகச் செயலாளர்: செல்வன் பூ. தவராசா உதவிச் செயலாளர்: ந. இராசதுரை. பொருளாளர்: மு. கார்த்திகேசு. போஷகர் சிவசிறி இலி. சிவஞான செல்வகுருக்கள்; ஆலோசகர் திரு. க. பாலிப்போடி மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக பதினைந்துபேர் தெரிவுசெய்யப்பட்டனர். இக்கிளையில் மொத்தம் ஐம்பத்திமூன்று அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

### கொழும்புக் கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையின் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் புதன்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டியிலுள்ள 51ம் எண் இல்லம் லொறிஸ் வீதியில் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் தமிழ் மக்கள் தேர்தலில் அளித்த தீர்ப்பு பற்றியும் நாம் இனி எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் கருத்துரைகள் வழங்கப்படும். இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் கலந்து கொள்வார்கள். இக்கருத்தரங்கு செல்வி திலகவதி கணபதிப்பிள்ளையின் தமிழீழப் பண்ணுடன் தொடங்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ இலட்சியத்தின் பரிணாம வளர்ச்சி!

**பாகிஸ்தான் கோரிக்கை ஜின்னா அவர்களால் முன் வைக்கப்பட்டபோது 'நடக்க முடியாதது; தனித்து நிற்கமுடியாதது' என்றெல்லாம் பலவிதத்திலும் விமர்சிக்கப்பட்டும் கேலிக்குள்ளாக்கப்பட்டும் வந்திருந்தாலும் "பாகிஸ்தான்" என்றொரு நாடு அவரின் காலத்திலேயே உருவம் அடைந்து இன்று உலகில் இயங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.**

போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட நமது தமிழ் நாடும் சிங்களவர்களின் சிங்கள இராச்சியமும், நிர்வாக வசதிக்காக 1833ம் ஆண்டு பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் ஒன்றிணைக்கப்பட்டிருந்தாலும் கூட ஐக்கிய இலங்கை'யின் கீழான விடுதலைக் கோரிக்கை இங்கே எழுந்ததேயன்றி — தமிழ் நாட்டின் விடுதலை என்றமுறையில் தமிழர்கள் சிந்திக்கவில்லை. நாளடைவில் ஆங்காங்கே தமிழ் நாடு — நமது தாய் நாடு என்ற உணர்வில்லாவிட்டாலும் கூட தனிநாடு என்ற கோரிக்கை எழத்தான் செய்தது. இருந்தும் அவை தமிழர்களாலேயே புறக்கணிக்கப்பட்டன.

ஒற்றையாட்சியில் நம்பிக்கையிழந்தும் கூட சமஷ்டிக் கோரிக்கை எழுந்ததேயன்றி —தமிழர்களிடையே தமது தாய் நாட்டின் விடுதலை, தனி வழி போதல் என்ற கருத்துக்கள் ஊட்டப்படாமல் இருந்தது. தமிழர்களின் அரசியல் சித்தாந்தம் பரிணாம வளர்ச்சியடைவதற்கு, சுதந்திரமடைந்த தினத்திலிருந்தே — தமிழர்களைப் பொறுத்தவரையில் — தமிழடிமைகளைப் பொறுத்தவரையில் — சிங்கள ஆட்சியாளர்கள் கைக்கொண்ட அரசியல் சித்தாந்தங்களும் ஆட்சிமுறைகளுமே காரணமாக இருந்தன என்று கூறினால் மிகையாகாது.

'தரப்படுத்தல்' — நடைமுறைப்படுத்தப்பட்டது; தமிழ் மாணவர்களை மிகவும் மோசமாகத் தாக்கியது; விளைவு — தமிழ் மாணவர் பேரவை என்ற அரசியல் அமைப்பு. பேரவையினர் தனிநாடு கோரிக்கையை மாணவர் மனதினில் ஊட்டி வளர்த்து வந்தனர். புதிய அரசியல் சட்டம் பிறந்தது; விளைவு—பிரிந்து நின்ற தமிழர்கட்சிகள் — இயக்கங்கள் யாவும் ஒன்றிணைந்த தமிழர் கூட்டணி; தமிழரசுக்கட்சியினரின் சமஷ்டிக்கோரிக்கை கைவிடப்பட்டது; 'சுயநிர்ணயம்'— சிந்தனை தீப்பொறியாக எழுந்தது; தீப்பொறியின் விளைவாக 'தமிழர் விடுதலைக் கூட்டணியும்' 'தமிழீழ விடுதலைப்பிரகடனமும்' உருவாகின.

தமிழீழ விடுதலைப் பிரகடனம் சிங்கள ஆட்சியாளருக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையிலான — அரசியல், பொருளாதார, கலாச்சார சமூக தொடர்புகளினதும் தாக்கங்களினதும் விளைவான அரசியல் சித்தாந்தத்தின் பரிணாம வளர்ச்சி என்று கூறுவது மிகவும் சரியே என்று வலியுறுத்தி மேலே போவோம்.

அடங்காத் தமிழர் முன்னணி; தமிழ் மாணவர் பேரவை தமிழர் சுயாட்சிக்கழகம் தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி என்று தாய்நாட்டின் விடுதலைக்கான குரல் வளர்ந்துவந்தபோதும் சரி இன்றும் சரி, எங்கிருந்தோ கூவிப் பிதற்றுபவர்கள் — பரிணாம வளர்ச்சியின் அடிப்படைகளை அறியாதவர்கள் — இன்றும் சலுகைகள் — உரிமைகள் என்று மகுடி வாசிப்பதுவும், 'தமிழீழம், தனித்து நிற்கவல்லதல்ல — உலகின் பொருளாதார அரசியற் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதது' என்று கூக்குரலிடுவதும் இன்றைய அரசியல் மேடையில் நடந்துகொண்டிருக்கும் ஒரு கேலிக்கூத்து நாடகத்தின் சில பாத்திரங்களும் சில அங்கங்களும் ஆகும்.

நாம் கோருவது தனிநாடு என்ற கருத்துடையவர்கள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டியதொன்றுண்டு.— போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டு — வெள்ளைக்காரரால் சிங்கள இராச்சியத்துடன் இணைக்கப்பட்ட எமது தாய்நாட்டின்—தமிழ் நாட்டின் — தமிழீழத்தின் விடுதலைக்காகவே நாம் போராடுகிறோம். எமது தாய் நாட்டின் விடுதலை என்று கூறுகையில் அடிமைப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டிருக்கும் எமது தமிழீழம், சிங்கள இராச்சியத்தின் பிடிப்பினின்று விடுதலையாகிப் பிரிந்துபோவது என்பதை உணர்த்துவதால்—தனிநாடு —பிரிவினை என்று கோருவதும் தர்க்கரீதியாகச் சரியாக இருப்பினும் நடைமுறையில், இருக்காத—இல்லாத ஒன்றை உருவாக்க முயலும் செயலாக ஒரு கருத்தை உணர்த்துவதால் — தனிநாடு பிரிவினை போன்ற வார்த்தைகளே நம்மைவிட்டு இல்லாமற் போய்விடவேண்டும்.

இயக்கத் தொண்டர்களிடையேயும்—இலட்சியத்தில் ஊறிய இளைஞர்கட்கிடையேயும் — சுதந்திரனிலும் மட்டுமே காணப்பட்ட தமிழீழம் இன்று தமிழ் மக்களிடையே பரவி அவர்களின் இலட்சியத்தின் தாரக மந்திரமாகியதோடு மட்டுமில்லாமல், Sunday Times—Daily News — போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளில் சிங்களவர்களினாலேயே விவாதிக்கப்படும் ஒரு பெரும் பிரச்சினையாகியுள்ளமை—நமது அரசியல் சித்தாந்தத்தின் பரிணாம வளர்ச்சியில்லாமல் வேறு என்ன?

இந்நிலையில் இலண்டன், ஈழவிடுதலை முன்னணியினர் —தமது இயக்கத்தின், பத்திரிகையின் பெயர்களை ஈழம் என்று மொட்டையாகக் கூறுவதுடன் தமது பத்திரிகையில் எமது நாட்டின் திருப்பெயரை —தமிழீழம்— என்று கூறாமல் ஈழம் என்று குறிப்பிடுவது வருந்துதற்குரியன. மேலும் நமது ஆதரவாளர்கள் சிலர் ஈழத் தமிழர்கள், முஸ்லிம்கள் என்று பிரித்துக் கூறுவது — தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் —முஸ்லிம் ஐக்கிய முன்னணியினரும் — பல மதங்களின் சார்பானவர்களை ஆதரவாளராகக் கொண்டிருந்தும் தமிழீழ மக்களாக, தமிழீழ விடுதலைக்காகப் போராடும் நிலையில் — வேதனையளிக்கிறது.

தமிழீழம் எமது தாரக மந்திரமாகட்டும்; எமது தாய்நாட்டின் திருப்பெயராகத் தமிழீழம் இருப்பதால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்று குறிப்பிடாமல்—தமிழீழம் என்றும் நம் எல்லோரையும் தமிழீழத்தவர் என்றும் அழைப்போமாக.

'தமிழீழப் பிரகடனம்' கேலிக்குரியதாக அற்பர்களாற் கணிக்கப்பட்டபோதும், பலர் தமது சொத்துக்களில் பெரும்பகுதியை தமிழீழத்திற்கு எடுத்துச் செல்வது — தமிழீழம் வலுவடைவதை உணர்த்துகிறது. இன்று சிறிதளவில் சொத்துக்கள் இடமாற்றம் செய்யப்பட்டாலும் — அந்நிலைமாறி — எங்கும் பரந்து வாழும் தமிழீழ மக்கள்— தமது தாய்நாட்டிற்குத் திரும்புவார்கள் என்பது நிச்சயமே!

கனவாகக் கற்பனையாகக் கதையாக இருந்து நனவில் நடக்கும் யதார்த்த பூர்வ நிகழ்ச்சியாகி வளர்ந்து வரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் — ஜின்னாவின் வாழ்நாளிலேயே பாகிஸ்தான் மலர்ந்து வளர்ந்ததைப்போல — மூதறிஞர் தந்தை செல்வாவின் அரசியல் வாரிசாகிய அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்நாளிலேயே தமிழீழம் விடுதலையாகி மலர்ந்து வளர்ந்து திகழ— எமது நடவடிக்கைகளால் செறிவடைந்து பரந்துபட்டு நடக்க உறுதிபூண்டு உழைப்போமாக.

**பூபதி**

---


# சூசைதாசனுக்கு வாழ்த்துரைக்க தந்தை செல்வா வந்திருந்தார்

மன்னார் த. வி. கூட்டணி வேட்பாளரான திரு. சூசைதாசன் அவர்களை ஆதரித்து 19.7.77 செவ்வாய் மாலை 6 மணிக்கு சட்டத்தரணி அ. புதுமைநாயகம் அவர்கள் தலைமையில் புனித செபஸ்தியார் கோவிலடியில் நடந்த கடைசிக் கூட்டத்தின் மேடையில் தந்தை செல்வாவும் வந்து நின்றார்.

நமது அன்புத் தந்தை— அருமைத் தந்தை தமிழினத்தின் உள்ளங்களில் உணர்ச்சி வெள்ளத்துடிப்பை ஊட்டிய உத்தமத் தந்தை, சொல்லும் செயலும் தூய்மை நிறைந்த செல்வத் தந்தை—தமிழினத்தின் விடுதலையே தனது பேச்சும்மூச்சுமாக வாழ்ந்த எங்கள் தந்தை செல்வநாயகம் அவர்கள் வேட்டிகட்டி — முழுக்கைச்சட்டை அணிந்து கழுத்திலே சால்வை அணிந்து 6 அடி உயரமான ஆசானுபாகுவாக நிமிர்ந்து நின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இரு கைகளாலும் சிறு மலர்மாலையைத் தாங்கிக்கொண்டு புன்னகை தவழும் வதனத்துடன் எத்தனைபேர் அவரின் முன்பாக நின்று பேசினாலும் அவர் யாருடனுமே வாய்திறந்து பேசாத மௌனியாக நின்றார்.

கூட்டத்தை ஆரம்பிக்க வந்த சட்டத்தரணி திரு. அ. புதுமைநாயகம் அவர்கள் தந்தையின் கழுத்தில் மலர்மாலை சூட்டி நெற்றியில் சந்தனத்திலகமிட்டு வணக்கம் கூறிக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

தந்தையின் கடைசி ஈமச் சடங்கில் கூட்டணியின் 26 வேட்பாளர்களில் திரு.சூசைதாசனைத் தவிர மற்றைய 25 பேரும் பங்குகொண்டதை யாவரும் அறிவர். சூசைதாசன் அவ்வேளை சாம்பியாவிலிருந்து வரமுடியாமல் வருந்தியதன் காரணத்தாலோ ஏதோ அவரை ஆசீர்வதித்து வெற்றிவாகை



சூடப்பண்ணத் தந்தை செல்வாவின் அரங்கில், தந்தையே நேரடியாக வந்து நிற்பதுபோலக்காணப்பட்டது மறக்கமுடியாத அந்த மேடைக் காட்சி.

மாண்டு மறைந்து எரிந்து சாம்பலான தந்தை அங்கே எப்படி வந்தாரென்று நீங்கள் அதிசயப்படக்கூடும். பனங்கட்டிக் கொட்டிலில் வசிக்கும் சிற்பக்கலைநுட்ப வல்லுனர் திரு: லீயோ அவர்களின் கைவண்ணத்தில் வடித்தெடுத்த உருவந்தான் தந்தை செல்வாவின் உண்மை வடிவு போன்ற அவ்வுருவமாகும். அதுமட்டுமல்ல அந்தச் சிற்பக் கலைஞர் திரு. ஜீ. ஜீ. திரு. திருச்செல்வம்—திருமதி சிறிமாவோ அம்மையார் போன்றோரின் அரை வடிவச்சிலைகளும் கிறிஸ்து சமய உருவங்களும் அவரது இல்லத்தில் செய்துவைத்துள்ளார்.

தந்தையின் இவ்வுருவத்தைக் கூடியகெதியில் மன்னார் பட்டினசபை முற்றத்திலோ—வாசிகசாலை முற்றத்திலோ நிறுத்திவைக்கும் வைபவமும் புதிய வேட்பாளரின் வெற்றிக்குப்பின்பு நடத்திவைக்கவேண்டுமென்று மக்கள் பேசிக் கொண்டனர்.

—எம். டி. ரேச்

---

"கோவை மகேசனின் அரசியல் மடல்கள் தமிழ்ப்படைஞர்களை ஊக்கி எழுப்பி நடத்தும் வீறுமிக்க போர்க்குரல்கள்!"

—சாலை இளந்திரையன்

இப்பொழுது விற்பனையாகிறது—

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் எழுதிய

**அரசியல் மடல்**

(முதலாவது தொகுதி)

— விடுதலைப் பாசறை வெளியீடு —

- தமிழீழ விடுதலைப் போரின் வரலாற்றுத்தொடர்
- தமிழின எதிரிகளுக்கோர் வெடிகுண்டு!
- விடுதலை வீரர்களுக்கோர் படைக்கலன்!

விலை ரூபா. ஐந்து

வியாபாரிகளுக்கு 10 வீதம் கழிவுண்டு

தொடர்பு கொள்க:

**கோவை மகேசன்**

194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ● உடுப்பிட்டி தேர்தல் முடிவு பற்றி ஒரு கருத்து

# சிறுபான்மை தமிழர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி மீது இனியும் சந்தேகப்படலாமா?

**த. வி. கூட்டணி சிறுபான்மைத் தமிழர்கள் அதிகமாக வாழும் கோப்பாய்த் தொகுதியை சிறுபான்மைத் தமிழருக்குக் கொடுக்காமல் உடுப்பிட்டித் தொகுதியைக் கொடுத்தது பற்றி சிறுபான்மைத் தமிழர் சிலர் சில கருத்துக்களை எழுப்பியிருந்தனர். சிறு பான்மைத் தமிழர் தலைவர்கள் சிலரும் த. வி. கூட்டணி உடுப்பிட்டியில் திரு. இராசலிங்கத்தை நியமித்ததன் மூலம் சிறுபான்மைத் தமிழ் மகன் பாராளுமன்றம் செல்வதைத் தடுக்கும் உள்நோக்கத்தை நிறைவேற்றி விட்டதென்று பிரசாரம் செய்தனர்.**

எல்லாரும் சிறுபான்மைத தமிழர் ஒருவர் வெற்றி பெறுவதென்றால் சிறு பான்மைத் தமிழர்கள். அதிகமாக உள்ள தொகுதியே பொருத்தமானது என்று பெருங் குரலெடுத்து ஒப்பாரி வைத்தனர்.

இத்தேர்தல் காலத்தில் படித்த சிறுபான்மைத் தமிழர்களுடனும் சாதாரண சிறு பான்மைத் தமிழர்களுடனும் நேரடியாக இது பற்றிப் பேச வேண்டிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருந்தது. பிரசாரக் கூட்டங்களிலும் சிறு பான்மைத் தமிழர் த. வி. கூ. ஆதரிக்க வேண்டு மென்றே பல காரணங்களை எடுத்துக்காட்டிப் பிரகாரம் செய்தேன்.

அப்போதெல்லாம் சிறுபான்மைத் தமிழர் பலர் த. வி. கூட்டணி தமது சமூகத்திலுள்ள மெத்தப் படித்த, அதி உயர்த்த பதவியிலுள்ள திரு. இராசலிங்கத்தை உடுப்பிட்டித் தொகுதியில் நிறுத்தியதன் மூலம் அவரைத் தோல்வி காணச் செய்து தமது சமூகத்திலுள்ள ஒருவரின் பெருத்த உத்தியோகத்தையும் இத் தேர்தல் மூலம் பறித்து விட்டது என்று நேரடியாகக் கூறினர்.

இவர்கள் எல்லாரும் உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராசலிங்கம் வெற்றி பெற மாட்டாரென்றே நம்பினர். த. வி. கூட்டணி தமக்குத் துரோகமிழைத்ததாகவும் கருதினர்.

இவர்களுக்கெல்லாம் த. வி. கூட்டணித் தலைவர்கள் அவ்வப்போது எத்தனையோ காரணங்களை எடுத்துக் காட்டியும் இவர்கள் திருப்தியடையவில்லை. திரு. சந்திரகாசன் இத்தொகுதியின் பிரசாரத்தில் முக்கிய பங்கெடுத்து தானே இத் தேர்தலில் போட்டியிடுபவர் போல் திரு. இராசலிங்கத்தின் வெற்றிக்காக மிகவும் அக்கறையாக உழைத்ததையும்கூட இது வெறும் கண் துடைப்பு என்று கருதிய சிறுபான்மைத் தமிழரும் இல்லாமலில்லை.

உயர்சாதித் தமிழர்கள் அதிகம் உள்ள தொகுதியொன்றில் சிறுபான்மைத் தமிழரை வெற்றி பெறச் செய்வதுதான் சமுதாய மாற்றத்தைக் குறிக்கும் வெற்றி என்று எடுத்துக் கூறியும் கடைசிவரை சிலரால் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாமலிருந்தது.

இவர்கள் கடந்த கால சரித்திரத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாதவர்களாகவே இருந்தனர்.

*1960*ம் ஆண்டு மாநகர சபைத் தேர்தலில் ஸ்டேசன் வட்டாரத்தில் போட்டியிட்ட சிறுபான்மைத் தமிழரான திரு. நா. த. செல்லத்துரை தமிழரசுக் கட்சியின் உதவியுடன் உயர்சாதித் தமிழர் மூவரை எதிர்த்து வெற்றிபெற்றதை இவர்கள் மறந்துவிட்டார்கள். தமிழரசுக்கட்சி தீண்டாமை ஒழிப்புப்பற்றிப் பேசிய ஆரம்பகாலத்திலேயே இவ் வெற்றி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

*1963*ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் உயர் சாதித் தமிழர் ஒருவருடன் போட்டியிட்ட தமிழரசு ஆதரவாளரான திரு. நா. த. செல்லத்துரை அங்கு *1400* வாக்குகள் பெற்று பெருவெற்றி பெற்றதையும் இவர்கள் மறந்துவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

*1977* ஆடி *21*ந் திகதி உடுப்பிட்டியில் வாழும் உயர்சாதித் தமிழர்கள் என்று கூறப்படுபவர்கள் நாடே பிரமிக்கத்தக்கதாக ஒரு சிறு பான்மைத் தமிழரைப் பாராளுமன்ற மனுப்பிய செயல் இந்த நாட்டுச் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

ஐந்தரை லட்சம் சிறுபான்மைத் தமிழ் மக்கள் முதன் முதலாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதுவும் தன்னுடன் எதிர்த்துப் போட்டியிட்ட 8 அபேட்சகர்களையும், படு தோல்வி அடையச் செய்ததுடன் பதினைன்காயிரத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டியுள்ள தேசிய அரசப் பேரவை உறுப்பினரைப் பெற்றுள்ளனர். த. வி. கூட்டணியின் அந்தரங்க சுத்தியான சாதி ஒழிப்பு நடவடிக்கையை இனியாயினும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் ஏற்று த. வி. கூட்டணியின் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டங்களில் தீவிர பங்கெடுப்பார்களென்று எதிர்பார்ப்போமாக.

வடமாகாணத்தில் போட்டியிட்ட சிறுபான்மைத் தமிழ் அபேட்சகர்கள் அவ்வப் பகுதிகளில் சாதியின் பெயரைச் சொல்லிப் பிரசாரம் செய்தும் அவர்கள் பிரசாரம் மக்களிடையே எடுபடாமல் போனதையும் இத் தேர்தல் மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் சாதி என்ற பேயை முற்று முழுதாக விரட்டி அடிப்பதற்கு த. வி. கூட்டணி பல திட்டங்களைத் தீட்டிப் பணியாற்றினாலே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டங்களில் சாதி, மத பேதமற்ற முறையில் தமிழ் மக்கள் பங்குபற்ற வாய்ப் பேற்படும் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிடத்தான் வேண்டும்.

| புத்தொளி.

## இராசதுரைக்குக் கிடைத்த வெற்றி கொள்கைக்கு கிடைத்த வெற்றியல்லவாம்

மட்டக்களப்பில் கூட்டணியின் வேட்பாளராக, கூட்டணியின் உதயசூரியன் சின்னத்துடன் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. இராசதுரையின் வெற்றி கொள்கைக்கு கிடைத்த வெற்றியல்லவாம்!

இப்படியெழுதியிருக்கிறது சிண்டுமுடியும் தினசதியாரின் சகதர்மிணி ஏடான சிந்தாமணி 24-7-77 இதழில் சிந்தாமணி எழுதியிருப்பதாவது:-

"(இராசதுரையின்) இந்த வெற்றியில் கொள்கையோ இலட்சியமோ, இலட்சியவாதிகளோ பங்கு கேட்க முடியாது.

"மட்டக்களப்பு மக்கள் (இராசதுரைக்கு) கொள்கைக்காகத்தான் வெற்றியீட்டித் தந்தார்கள் என்றால் அந்தக்கொள்கைக்கு குத்துவிளக்கு பிடிப்பதாக பீற்றிக் கொண்டவர்கள் அல்லவா வென்றிருக்க வேண்டும்?

"இலட்சியத்திற்குதான் வெற்றி, இராசதுரைக்கல்ல என்றால் — அதே இலட்சியத்தை கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிற மற்றவர்களும் கிழக்கு முழுவதிலும் வென்றிருக்கவேண்டுமே!"

இவ்வாறு வியாக்கியானம் செய்திருக்கிறதுசிந்தாமணி. சிந்தாமணியின் இந்த வியாக்கியானத்தை கண்டித்து திரு. இராசதுரை அறிக்கையொன்றை வெளியிடவேண்டுமென மட்டக்களப்பிலுள்ள கூட்டணி ஆதரவாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## மத்திய கொழும்பில் 20,000 வாக்காளருக்கு என்ன நடந்தது?

* மத்திய கொழும்புத் தொகுதியில் சுமார் 60,000 வாக்குகள் பதிவு செய்யப்படவில்லை அதாவது சுமார் 20,000 பேர் வாக்களிக்கவில்லை. இது ஏன்? இதன் பின்னணியில் ஏதாவது மர்மம் உண்டா?

* இவர்கள் தாமாக வாக்களிக்கச் செல்லவில்லையா? அல்லது யாராவது வேட்பாளர்களின் கையாட்களால் பயமுறுத்தப் பட்டார்களா?

* இப்படி வாக்களிப்பதற்கு செல்லாத வாக்காளர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் என்பது உண்மையா?

* இந்த 20,000 வாக்காளர்களும் தமது வாக்குகளை பதிவு செய்திருந்தால்—திரு. செல்லச்சாமி வெற்றிபெற்றிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்குமா?

* மத்திய கொழும்பில் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள ஒரு குறிப்பிட்ட வாக்குச் சாவடியில் பணியாற்றிய தேர்தல் உத்தியோகத்தர்கள் வகுப்புவாத அடிப்படையில் நடந்து கொண்டதாக கூறப்படுவது உண்மையா?

* கொழும்பில் முந்திய அரசாங்கக்கட்சி ஆதரவாளர்களும் இன்றைய அரசாங்க ஆதரவாளர்களும் பல இடங்களில் தேர்தல் சட்டத்தை மீறி நடந்து கொண்ட போதிலும், பொலிசார் நடவடிக்கையெதுவும் எடுக்காமல் மௌனம் சாதித்தது ஏன்?

இவ்வாறான கேள்விகள் மத்திய கொழும்பு வாக்காளரிடையே ஆங்காங்கு பரவலாக கேட்கப்படுகிறது.

## மகளிர் பேரவை பிரார்த்தனை

தமிழ் மகளிர்பேரவையின் கொழும்புக்கிளையினர் நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை எதிர்வரும் வெள்ளியன்று (29-7-77) மாலை 5-30 மணிக்கு கொம்பனித்தெரு புனிதசெபமாலை மாதாகோவிலில் இடம்பெறும்.

## அரசியல் மேடை

—4-ம் பக்கத் தொடர்

விடுதலைக் கூட்டணியிடம் இந்தத்தேர்தலில் மிகவும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் ஒப்படைத்திருக்கிறார்கள்!

**தமிழ்ஈழம், சிறீலங்கா ஆகிய இரண்டு நாட்டு மக்களும் தந்துள்ள இத்தெளிவான தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு இரு நாட்டுத் தலைவர்களும் பிரச்சினையை அணுகினால்—இருநாடுகளும் சமாதானமாகவும் சுதந்திரமாகவும் வாழவழி பிறக்கும்!!**

எந்த வழியிற் சென்றும் நம் இதயகீதமாம் தமிழ் ஈழத்தை வென்றெடுத்திட உறுதி பூணுகின்ற அதே வேளையில், தேர்தல் ஏற்படுத்திய பகைமைகளையும் மனக்கசப்புக்களையும் அடியோடு மறந்து, தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி இனஒற்றுமையை மேலும் பலப்படுத்துவதே நமது இன்றைய குறிக்கோளாக இருந்திடட்டும்! தேர்தல் ஏற்படுத்திய மனப்புண்களை ஆற்றி தமிழ் சமுதாயத்தை இறுக்கமாக இணைத்திட நாம் பணியாற்றிட வேண்டிய நேரம் இது!

ஆம், பகைமை மறப்போம் — பணி தொடருவோம் என்பதே இன்று நம் சிந்தனையும் செயலுமாக இருந்திடட்டும்.

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்


'ஒலிவ் ஸ்நானப் பவுடர்'

எண்ணெய் முழுக்குக்கு சிறந்தது.

தலை மயிரிலுள்ள அழுக்கு, பிசான்; சொடுகு; பேன்; ஆகியவற்றை நீக்கி, கண்ணுக்குக் குளிர்ச்சியையும். தலைமயிருக்கு வளர்ச்சியையும் தருகின்றது. வாங்கி உபயோகியுங்கள்.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜூலை மாதம் 20-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org